# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.142/2025

**Deposition of Witness for Prosecution PW 23**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Dr. நவீன் | Father's Name | : | நாகராஜன் |
| Village | : | திருவாரூர் | Taluk | : | திருவாரூர் |
| Calling | : | மருத்துவர் | Age | : | 37 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 10th day of February 2026.**

**(A1 to A8 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவதுறையில் முதுநிலை பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.02.2025 அன்று பணியிலிருந்தபோது வடபாதிமங்கலம் காவல் நிலைய கு.எண் 14/2025 வழக்கில் சம்மந்தப்பட்ட ராபர்ட் (எ) சோமசுந்தரம், வயது 36 என்பவரின் பிரேதத்தினை பிரேத பரிசோதனை செய்ய வடபாதிமங்கலம் காவல் ஆய்வாளர் அவர்கள் காவலர் 1736 திரு வினித்ராஜ் என்பவர் மூலம் பிரேத பரிசோதனைக்காக வேண்டுகோள்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:32:00 +0530

கடித்தை கொடுத்தார். அதனை பெற்றுக்கொண்டு நான் பிரேத பரிசோதனை செய்தேன். நல்ல உடல் வாகு கொண்ட ஆணின் பிரேதமானது மல்லாந்த நிலையில் காணப்பட்டது. பிண விரைப்பு உடல் முழுவதும் காணப்பட்டது. இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு 1) 7x1 செ.மீ x சதை ஆழத்திற்கு, 10x2 செ.மீ x சதை ஆழத்திற்கு இடதுபுற உச்சந்தலையில் கிழிந்த காயம் காணப்பட்டது. 2) 5x3 செ.மீ x எலும்பு ஆழத்திற்கு இடதுபுற உச்சந்தலை மற்றும் இடது புற பின்தலையில் கிழிந்த காயம் காணப்பட்டது. 3) 3x2 செ.மீ அளவில் வலதுபுற கன்னத்தில் செம்பழுப்பு நிற சிராய்ப்பு காயம் காணப்பட்டது. 4) இடதுபுற தாடை வீங்கி மற்றும் தாடை எலும்பு உடைந்தும் அதை சுற்றியுள்ள மென்திசுக்கல் கருஞ்சிவப்பு நிற ரத்தம் கசிந்தும் காணப்பட்டது. தலைப்குதியை கூராய்வு செய்து பார்த்ததில் இடது மற்றும் இடது புற உச்சந்தலை உட்புற தலைதோலில் கருஞ்சிவப்பு நிற கன்றிய காயம் காணப்பட்டது. மேலும் 4x3 செ.மீ. அளவில் இடதுபுற உச்சந்தலை மற்றும் இடது புற பின் தலையில் உள்ள எலும்புகள் உடைந்து நொருங்கி காணப்பட்டது. எலும்பு உடைந்த அடிப்பகுதியில் உள்ள மூளை திரை கிழிந்து காணப்பட்டது. 3x1x1 செ.மீ. அளவில் இடது புற மற்றும் இடது பின்புற மூளை கிழிந்து காணப்பட்டது. மூளை முழுவதும் ரத்தம் கசிந்து காணப்பட்டது. இடது புற மண்டையோட்டின் அடிப்பகுதியின்

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:32:05 +0530

முன் மற்றும் மையப்பகுதியில் உள்ள எலும்புகள் உடைந்து காணப்பட்டது. நாவடி எலும்பு, இருதயம், நுரையீரல்கள், கல்லீரல், மண்ணீரல், இரு புற சிறுநீரகம், இடுப்பு எலும்பு, தண்டுவள எலும்பு நல்ல நிலையில் காணப்பட்டது. இரைப்பையில் 75 கிராம் பாதி செரித்த உணவு எந்தவிதமான வாசனையுமின்றி காணப்பட்டது. பெருங்குடல் காற்று அடைத்து காணப்பட்டது. சிறுநீர் பை காலியாக காணப்பட்டது. உள்ளுறுப்புகளை சேகரித்து தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்த அறிக்கையில் அவர் மது உட்கொண்டுள்ளார் என்று கண்டறியப்பட்டது. அந்த Toxicology அறிக்கை **அ.சா.ஆ.19**. துணி மாதிரியை சேகரித்து அதன் ரத்த வகையை அறிய திருச்சி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதில் அவர் ஏ ரத்த வகையை சேர்ந்தவர் என்று கண்டறியப்பட்டது. அந்த Serology அறிக்கை **அ.சா.ஆ.20**. மேற்கூரிய நபர் தலையில் ஏற்பட்ட காயத்தின் விளைவால் இறந்துள்ளார். மேற்கூரிய நபர் 12 முதல் 24 மணி நேரத்திற்கு முன் இறந்திருக்க வாய்ப்புள்ளது என்று கருத்து கூறி சான்று வழங்கினேன். இறுதி கருத்துரையுடன் கூடிய பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.21**. தலையில் ஏற்பட்ட காயம் கருங்கல்லை தலையில் தூக்கி போட்டால் ஏற்பட வாய்ப்புண்டு. மற்ற காயங்கள் ரீப்பர் மற்றும் கட்டையால் அடித்தால்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:32:10 +0530

ஏற்பட வாய்ப்புண்டு. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை எந்த தேதியில் விசாரித்தார் என்று எனக்கு ஞாபகமில்லை. போலீசார் என்னை விசாரித்தபோது ஆயுதங்கள் எதையும் காண்பித்து விசாரித்தார்களா என்றால் ஞாபகமில்லை. இறந்தவர் மது அருந்தி அதிக போதையில் இருந்தார் என்றால் சரி. கரடு முரடான கருங்கல் உள்ள இடத்தில் வேகமாக அவர் தடுமாறி விழுந்தால் அவருக்கு காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.10 16:32:16 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.